**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.3/2025**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா, அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு மார்ச் மாதம் 03 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வரதன் | மதம் | : இந்து |
| த/பெ | : தங்கவேல் பிள்ளை | ஜாதி | : -- |
| வயது | : 66 | கிராமம் | : திருப்பதி |
| தொழில் | : வண்ணம் தீட்டுபவர் | வட்டம் | : திருப்பதி |

**03.03.2026**
**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 25.02.1967ம் தேதியிட்டு எத்திராஜ் அம்மாளுக்கு உமாபதி எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் மற்றும் அதன் தமிழ் மொழிபெயர்ப்பு தாக்கல் செய்கிறேன். **(செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 22.01.1997ம் தேதியிட்டு 2ம் பிரதிவாதியின் கணவர் கதிர்வேலுக்கு 1ம் பிரதிவாதி எழுதி வைத்த கிரைய ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. 22.10.2008ம் தேதியிட்டு 1, 3, 5 பிரதிவாதிகள் 11ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த கிரைய ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 20.03.2004ம்

தேதியிட்டு 11ம் பிரதிவாதி 12ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 01.01.1975 முதல் 21.03.2024ம் தேதி வரையிலான வில்லங்க சான்று இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(வில்லங்க சான்று வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 07.01.2023ம் தேதியிட்டு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன். **(வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் 5 எண்ணம் மற்றும் திரும்ப வந்த அஞ்சல் உறை தாக்கல் செய்கிறேன். **(அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் (5 எண்ணம்) மற்றும் அஞ்சல் உறை வா.சா.ஆ 7 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது)** 11, 12 பிரதிவாதிகள் 15.07.2024ம் தேதியிட்டு அனுப்பிய பதில் அறிவிப்பு தாக்கல் செய்கிறேன். **(பதில் அறிவிப்பு வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** தங்கவேல் பிள்ளையின் வம்சா வழி விவரம் தாக்கல் செய்கிறேன். **(வம்சா வழி விவரம் வா.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)